**இலங்கை கிரிக்கெடம்- 2022**

---------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இலங்கை கிரிக்கெட்டின் (“இலங்கை கிரிக்கெட்”) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இலங்கை கிரிக்கெட்டின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகைக்குட்பட்ட தரப்பினரின் பொறுப்பு**

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை கிரிக்கெட்டின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை கிரிக்கெட்டின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை கிரிக்கெட்டின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள்,

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்

நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.5.1 பெற வேண்டியவை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு ஆர்.பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானம் மற்றும் 2020 ஆம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கட் மைதானத்தை நிர்மாணிப்பதற்காக இரண்டு தனியார் நிர்மாண நிறுவனங்களுக்கு ரூபா 9 மில்லியன் மற்றும் ரூபா 11.9 மில்லியன் முற்பணங்கள் வழங்கப்பட்ட போதிலும், இந்த முற்பணங்கள் தீர்க்கப்படுவதற்கான | இத்திட்டங்கள் தொடர்பான கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ள போதிலும், ஆவணங்களை பூர்த்தி செய்வது தொடர்பான பணிகள் முழுமையடையாததால், இந்த நிலுவைகள் தொடர்பான கணக்குகளை சீராக்குவதற்கு முடியாதிருந்ததுடன் இந்நடவடிக்கைகள் முடிவற்ற பின்னர் | பெற வேண்டிய மீதிகளை கால தாமதமின்றி அறவிடுவதற்கு மற்றும் கொடுக்கல் வாங்கல் சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன், 2020ஆம் ஆண்டின் மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் நிர்மாண ஒப்பந்தம் மீளாய்வாண்டில் நிறைவடைந்திருந்த போதிலும், அதற்காக 2020ஆம் ஆண்டு தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 11.9 மில்லியன் ஆன முற்பண மீதியும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இம்மீதிகளுக்கான சீராக்கங்கள் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். | |
| (ஆ) | இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் மொனரவில கிரிக்கெட் மைதானத்தில் 07 டர்ஃப் விக்கெட்டுகளை (Turf Wicket) நிர்மாணிப்பதற்காக 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட முற்பணத்தில் இருந்து ரூபா 5.6 மில்லியன் மற்றும் வித்யார்த்த வித்தியாலய மைதான நிர்மாணத்திற்காக 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட முற்பணத்தில் இருந்து ரூபா 6.6 மில்லியன் ரூபாவும் ஆக மொத்தம் ரூபா .12.2 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் வழங்கப்பட்டது. ஸ்டேடியம். மதிப்பாய்வின் கீழ் ஆண்டு இறுதி வரை தீர்க்கப்படவில்லை. | மொனரவில கிரிக்கெட் மைதானம் மற்றும் வித்யார்த்த வித்தியாலய மைதானத்தின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ள போதிலும், உரிய ஆவணங்களை பூர்த்தி செய்யும் பணிகள் நிறைவடைந்தவுடன் இந்த நிலுவைகள் தொடர்பான கணக்குகளை சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். | முற்பணங்கள் தாமதமின்றி தீர்க்கப்படுதல் மற்றும் தேவையான கொடுக்கல் வாங்கல் சரியாக கணக்கிடப்பட வேண்டியமை. |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் இலங்கையில் தெற்காசியச் சுற்றுலாவிற்காக பெற வேண்டிய அனுசரணை உரிமைகளுக்கான வருமானமான ரூபா 37.1 மில்லியன் பெறுமதியான அந்த அனுசரணைக் கம்பனியிடமிருந்து பெற வேண்டியவையாக நிதிக்கூற்றுக்களில் | இத்தொகை அறிக்கையிடல் திகதியில் இது இலங்கை கிரிக்கெட்டினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இருந்த போதிலும், இலங்கை கிரிக்கெட்டிற்கு இத் தொகை செலுத்தப்பட்டுள்ளதாக | பெற வேண்டிய மீதிகளை கால தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| காட்டப்பட்டிருந்தும் இது தொடர்பாக நிறுவனம் 2018 ஒக்டோபர் 04 அன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வழங்குநர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான விசாரணையொன்று கொழும்பு தலைமை நீதவான் நீதிமன்றத்தில் (வழக்கு இலக்கம் பீ/657/01/18 வழக்கு) மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட திகதியின் போது அது முடிக்கப்பட்டிருக்க வில்லை. |

### 1.5.2 செலுத்த வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் ஏனைய செலுத்த வேண்டிய மீதியில், ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட செலுத்தப்படாதிருந்த ரூபா 5 மில்லியன் மீதியொன்று காணப்பட்டது. | திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 5,120,380 இற்கான அனைத்து ஆவணங்களையும் அங்கீகாரத்துடன் பெற்ற பிறகு தேவையான சீராக்கங்கள் செய்யப்பட்டு இம்மீதிகளுக்கான சீராக்கங்கள் செய்யப்படுவதற்கான தேவையான நடவடிக்கை 2023 ஆம் வருடத்தில் எடுக்கப்படும். . | செலுத்த வேண்டிய மீதிகளை கால தாமதமின்றி தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 6,048 மில்லியன் ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,479 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 3,569 மில்லியன் ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வருமானம் ரூபா 9,586 மில்லியன் ஆல் அதிகரித்தமையே இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொலன்னறுவை ஹிங்குராக்கொட பிரதேசத்தில் சர்வதேச தரத்திற்கு மேம்படுத்தும் வகையில் தேசிய கிரிக்கெட் மைதானம் மற்றும் பல்விளையாட்டுத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டு 2018 ஒக்டோபர் மாதம் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்ட 2017 ஆகஸ்ட் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட திட்டத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையில் ரூபா 154 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும், எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனம் இதுவரையில் தவறியிருந்தது. | இப்பணியை நிறைவேற்றுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, ஆனால் இது தொடர்பான சேவைகளை வழங்கும் மற்றைய அரச நிறுவனங்களிடம் இருந்து எதிர்பார்த்தபடி விரைவான சேவையொன்று வழங்கப்படாமையால் இந்த நிலம் தொடர்பான வரி பத்திரம் தயாரிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | ஒப்பந்த நிர்வாகம் முறையாக செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, கிளிநொச்சி கிரிக்கெட் மைதானத்தில் எஞ்சியுள்ள பணிகளை முடிப்பதற்காக 2018 ஆம் ஆண்டு இலங்கை ரூபாவை கிரிக்கெட் நிறுவனத்தினால் ரூபா 10 மில்லியன் இராணுவ செயற்திட்டக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட போதிலும் அந்த பணத்தில் எதிர்பார்த்த மாகாணத்தில் உள்ள வீரர்கள் மற்றும் கிரிக்கெட் பயிற்சியாளர்கள் பயன்பெறுவதற்காக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை . நிறைவேற்றுவதில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தவறியிருந்தது. | அமைச்சின் கோரிக்கைக்கு இணங்க, இலங்கை கிரிக்கெட், நிர்வாகக் குழுவின் அங்கீகாரத்துடன் இலங்கை இராணுவச் செயற்திட்டக் கணக்கில் ரூபா 10 மில்லியன் செலவு வைக்கப்பட்டது. இதர அரச நிறுவனங்களின் இது தொடர்பான சேவைகள் மந்தகதியில் நடைபெறுவதால் மைதானத்தின் அபிவிருத்திப் பணிகள் முடிவடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். | நிறுவனத்தினால் நிதியளிக்கப்படும் போது எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதில் ஆளுநர் சபையின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | தென் மாகாண கிரிக்கெட் சங்கத்தின் அரசியலமைப்பின் பிரகாரம், அதன் அதிகாரிகளால் பொதுச் சபைக் கூட்டம் வருடாந்தம் மற்றும் அலுவலகத் தேர்தல்கள் 3 வருடங்களுக்கு ஒரு முறையும் நடாத்தப்படாததுடன்இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ரூபா 84 மில்லியன் தென் மாகாண கிரிக்கெட் சங்கத்திற்கு நிர்வாகப் பணி, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விளையாட்டு அபிவிருத்திப் பணிகளுக்காக செலுத்தப்பட்டிருந்தது. | 2006 முதல் 2016 வரை தென் மாகாண கிரிக்கெட் சங்கத்திற்கு பணம் செலுத்துவதற்கு உரிய காலத்தில் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். | கிரிக்கெட் சங்கங்களின் சட்டப்பூர்வ தேவைகளை நிறைவேற்றுவதில் நிறுவனத்தின் நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும். |
| (ஈ) | 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு பின்னர் பாதியிலேயே நிறுத்தப்பட்ட செய்யப்பட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 29 மில்லியன் ஆன செயற்திட்டமொன்று மீள் நிர்மானத்திற்காக ஆலோசனை சேவைகளைப் பெறுவதற்காக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ஆலோசனை கம்பனிகளுக்கு செலுத்தப்பட்ட ரூபா 11 மில்லியன் நடைமுறை வேலை மீதிகளின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தை முடிப்பது தொடர்பாக் நிர்வாகம் சரியான கவனம் செலுத்தாததால் செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவொன்றாக காணப்பட்டது. | ரூபா 29 மில்லியன் பணம் செலவிடப்பட்டமை சுதந்திர கோபுர திட்டத்திற்காக அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ரூபா 11 மில்லியன் ஆன தொகை சுதந்திரக் கோபுரத்தின் நிர்மாணப் பணிகளுடன் தொடர்புடையது என்பதுடன் இது ஒரு தொடர்ந்து செல்லும் வேலைத்திட்டமாகும். இதற்கான பணிகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். | திட்டங்களை எதிர்பார்த்த காலத்திற்குள் முடிப்பதிலும், முதலீட்டுப் பணத்தில் எதிர்பார்த்த இலாபத்தை தாமதமின்றி பெறுவதிலும் நிர்வாகம் கவனம் செலுத்த வேண்டும். |
| (உ) | பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நீச்சல் தடாகம் அமைப்பதற்கான ஒப்பந்தம் 2019 நவம்பர் 20 அன்று வழங்கப்பட்டு நிர்மாணப் பணிகள் 2019 திசெம்பர் 04 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு | நாட்டில் நிலவிய covid 19 தொற்றுநோய் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, குறித்த ஒப்பந்ததாரரால் இந்த திட்டத்தை திட்டமிட்ட திகதியில் | ஒப்பந்த நிர்வாகம் முறையாக செய்யப்படடு கட்டுமான பணிகள் தாமதமின்றி முடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்காக ரூபா 147 மில்லியன் செலவிடப்பட்ட போதிலும் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடிக்கப்படவில்லை. | முடித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடம் ஒப்படைக்க முடியவில்லை. இத்திட்டம் இறுதிக்கட்டத்தில் உள்ளதால், 2023 ஆம் ஆணடிற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. | |
| (ஊ) | நடைபெற்று வரும் வேலைகளின் கீழ் கட்டுமானப் பணிகளை முடிப்பதற்கான திகதி குறிப்பிடாமல் ரூபா 37 மில்லியன் பெறுமதியான ரங்கிரி தம்புலு சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் முன்மொழியப்பட்ட நீச்சல் குளம் நிர்மாணத் திட்டம் 20 2019 நவம்பர் அன்று நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டும் மீளாய்வாண்டு வரை திட்டத்தின் கட்டுமானப் பணிகள் நிறைவடையவில்லை. | நாட்டில் நிலவிய covid 19 தொற்றுநோய் மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, குறித்த ஒப்பந்ததாரரால் இந்த திட்டத்தை திட்டமிட்ட திகதியில் முடித்து இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திடம் ஒப்படைக்க முடியவில்லை. இத்திட்டம் இறுதிக்கட்டத்தில் உள்ளதால், 2023 ஆம் ஆணடிற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. | ஒப்பந்த நிர்வாகம் முறையாக செய்யப்பட்டு கட்டுமான பணிகள் தாமதமின்றி முடிக்கப்பட வேண்டும். |
| (எ) | நடைபெற்று வரும் வேலைகளின் கீழ காட்டப்பட்டுள்ள ரூபா 38 மில்லியன் பெறுமதியான மகிந்த ராஜபக்ச சர்வதேச கிரிக்கட் மைதானத்தின் புனரமைப்புத் திட்டத்தில் உள்ளடங்கிய மின்சார யானை வேலியொன்று மற்றும் ஊடக கட்டிடமொன்றின் நிர்மாணப பணிகள் 2020 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு அதே வருடத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் முடிக்கப்படவில்லை. | நாட்டில் நிலவும் covid 19 தொற்றுநோய் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக, யானை வேலி கட்டும் திட்டம் 2020 நவம்பர் 27 அன்று முடிக்கப்பட்டது, மேலும் ஊடக கட்டிடம் பழுதுபார்க்கும் திட்டம் 2020 நவம்பர் 1 இல் நிறைவடைந்தது. ஆனால் இந்தத் திட்டங்களை மூலதனமாக்குதல் தொடர்பான ஆவணங்கள் முழுமையடையாததால், இந்தத் திட்டங்கள் நடைமுறை திட்டங்கள் என்று பெயரிடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாகஇந்த ஆவணங்கள் முடிவடைந்த பின்னர் நஇந்தத் திட்டங்களை மூலதனமாக்குவதற்குத் | ஒப்பந்த நிர்வாகம் முறையாக செய்யப்பட்டு முடிக்கப்பட்ட திட்டங்கள் தாமதமின்றி மூலதனமாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தேவையான நடவடிக்கைகளை எடுப்போம் என்று எதிர்பார்க்கிறோம். | |
| (ஏ) | 2014 மற்றும 2015 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டு ரூபா 47 மில்லியன் செலவிடப்பட்ட பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் உள்ளக வலை கட்டிடமொன்று நிர்மாணித்தல் , ரங்கிரி தம்புலு சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் உள்ளக வலை கட்டிடமொன்று நிர்மாணித்தல், ஆர் பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நீச்சல் குளம் மற்றும் உள்ளக வலை கட்டிடமொன்று நிர்மாணித்தல் போன்ற 04 செயற்திட்டங்களில் கட்டுமானம் மற்றும் ஆலோசனை ஒப்பந்ததாரராக இருந்த மத்திய பொறியியல் பணியகத்துடன் தொடர்புடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து தேவையான அங்கீகாரங்களைப் பெற இயலாத காரணத்தால் அவை கைவிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின நிதிக்கூற்றுக்களில் நடைமுறை வேலைகளாக காட்டப்பட்டிருந்தன. | இதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, விளையாட்டு அமைச்சின் பரிந்துரைகள் நிர்வாக சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொருத்தமான கணக்கியல் சீராக்கங்களை செய்வதற்கு விளையாட்டு அமைச்சின் அங்கீகாரம் பெறப்படும் வரை கணக்குகளில் நடைமுறை வேலைகளாக சேர்க்கப்பட்டிருந்தன. | செயற்திட்ட முகாமைத்துவம் திறமையாக செய்யப்பட வேண்டியதுடன் நிறுவனத்தின் நிதியத்தை திறமையற்ற வகையில் பயன்படுத்தல் தொடர்பில் பொறுப்பான தரப்பினரை அடையாளங் கண்டு அது தொடர்பாக முகாமைத்துவம் முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 இருப்பு முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ள பொருட்கள் இருப்பில் கடந்த 04 வருடங்களாக நகர்த்தப்படாமல் இருந்த ரூபா 7 மில்லியன் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களின் இருப்பொன்று காணப்பட்டது. | இறுதி இருப்பில் ரூபா 7,066,951 பெறுமதியான இருப்பொன்று காணப்பட்டதுடன் இந்த இருப்பு மேலும் 4 வருட காலப்பகுதியில் நகர்த்தப்படாத இருப்பு | நிறுவனத்தின் இருப்பு தேவைக்கு ஏற்ப, இருப்பு சேகரிப்பு மற்றும் உள்ளக கட்டுப்பாடு முறையாக மேற்கொள்ளப்பட |

என்பதை எங்கள் சங்கம் முன்பு இனங்கண்டுள்ளது. எதிர்காலத்தில் போட்டிகள் நடைபெறும் போது FIFO இருப்பு எண்ணக்கருவின் கீழ் விநியோகிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

வேண்டும்.